| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயிர்த்துளி | | |
|---|---|---|
| மழைநீரை சேமிப்பீர் ! | | குடிநீரை பெருக்குவீர்!! |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற **30.05.2018**ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

**1)** இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் ஏப்ரல் **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். **(க.எண்.1464/2016/சி1)**

**2)** இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஏப்ரல் **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். ( க.எண்.**1464/2016/சி1)**

**3)** இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஏப்ரல் **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். ( க.எண். **1464/2016/சி1)**

4) அரசு ஆணை(நிலை)எண் 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:12.01.1999-ன் படி உருவாக்கப்பட்ட பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொழில் வரி விதிகள் - 1999 விதி 16 ன் படி ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒருமுறை குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் அதிகபட்சம் 35 சதவீதம் வரை உயர்வு செய்யப்படவேண்டும் எனவும் அதன் அடிப்படையில் நகராட்சிகளில் தொழில்வரியானது 1.10.2018 அதாவது நடப்பு நிதியாண்டில் இரண்டாவது அரையாண்டிலிருந்து திருத்தப்பட்ட விகிதத்தில் வசூல் செய்யப்பட வேண்டும் எனவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 12503/2018/ஆர்1 நாள்: 21.05.2018 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு/தனியார் நிறுவனங்கள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் வசூலிக்கப்படும் தொழில் வரிகளை 1.10.2018 முதல் கீழ்கண்டுள்ளவாறு உயர்வு செய்து நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | 1.10.2013 முதல் 30.09.2018 வரை நிர்ணயித்த தொழில் வருமானம் | தற்போதைய தொழில் வரி | 1.10.2018 முதல் 30% சதவீதம் உயர்வு செய்து நிர்ணயித்தால் செலுத்தப்படும் தொழில் வரி |
|---|---|---|---|
| 1. | ரூ.21000 வரை | இல்லை | - |
| 2. | ரூ.21000 முதல் 30000 வரை | 133 | 166 |
| 3. | ரூ.30001 முதல் 45000 வரை | 330 | 413 |
| 4. | ரூ.45001 முதல் 60,000 வரை | 659 | 824 |
| 5. | ரூ.60000 முதல் 75000 வரை | 988 | 1250 |
| 6. | ரூ.75000 ற்கு மேல் | 1316 | 1250 |

**அலுவலக குறிப்பு :**

1) தற்போதைய தொழில்வரியில் 30 சதவீதம் உயர்வு செய்திடவும் வ.எண் 5 மற்றும் 6க்கான இனங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு அதிகபட்சம் ரூ.1250 என நிர்ணயக்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) உயர்வு செய்யபட உள்ள தொழில்வரி குறித்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் விளம்பர நடவடிக்கைகள் (News paper publication) மேற்கொள்ளவும் அதற்காகும் செலவு தொகையினை வழங்கவும் அனுமதிக்கலாம்.

5) இந்நகராட்சியில் பொறியாளர் நிலை II ன் பணியிடம் அரசாணை எண் **168** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **20.03.1990**ன்படி தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும், மேற்படி பணியிடத்தை பணி நீட்டிப்பு பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை **ந.க.எண்.55526/2011/எப்3** நாள் **19.12.2012** ல் **1.10.2012** முதல் **30.9.2013** வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி பொறியாளர் நிலை – II பணியிடம் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 24 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும், மேற்படி பணியிடத்தினை **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : நகராட்சி பொறியாளர் நிலை – II பணியிடத்தினை **1.10.2013** முதல் **30.09.2018** வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.1373/2016/சி1)**

6) இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஒரு மின்கண்காணிப்பாளர் நிலை–**1** பணியிடமானது அரசாணை எண்**237**, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை,நாள் **14.2.1975** ன் மூலம் தோற்றுவிக்கப்பட்டு தொடர்ந்து **35** ஆண்டுகளுக்கு மேலாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் **ந.க.எண்.55526/2011/எப்3** நாள் **19.12.2012** ன் மூலம் **01.10.2012** முதல் **30.09.2013** வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு **37** ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியாலும், இப்பணியிடத்தை **1.10.2013** முதல் **30.9.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **1.10.2018** முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மின்கண்காணிப்பாளர் நிலை – **1** பணியிடத்தினை **1.10.2013** முதல் **30.09.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018**முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.1374/2016/சி1)**

7) இந்நகராட்சிக்கு ஒரு பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **2.2.1993** ன்படி தோற்றுவிக்கப்பட்டு, இப்பணியிடம் **20.03.1994** ம் தேதியில் பூர்த்தி செய்யப்பட்டு 22 வருடங்கள் முடிந்து விட்டன. ஒவ்வொரு ஆண்டும் பணியிட நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக இப்பணியிடம் **1.10.2012** முதல் **30.9.2013** வரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் **ந.க.எண்.55526/2011/எப்3** நாள் **19.12.2012** ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, இப்பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 22 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடத்தினை **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.1375/2016/சி1)**

**8)** இந்நகராட்சியிலுள்ள வரைவாளர் நிலை – III பணியிடமானது அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் **2.2.1993** ன்படி தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55526/2011/எப்3 நாள் **19.12.2012** ல் **1.10.2012** முதல் **30.9.2013** வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியிடமானது மிகவும் அத்தியாவசிய தேவையாக உள்ளதால் **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : வரைவாளர் பணியிடத்தினை **01.10.2013** முதல் **30.09.2018**வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.1376/2016/சி1)**

**9)** இந்நகராட்சியில் பண்டகக் காப்பாளர் பணியிடம் ( உதவியாளர் நிலை ) அரசாணை எண் **764**, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் **19.05.1984** ல் அனுமதிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பணி நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் மூ.மு.எண். **25678/2016/எச்1** நாள் **28.11.2016** ல் **30.9.2016**வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் இப்பணியிடம் இந்நகராட்சிக்கு தொடர்ந்து தேவைப்படுவதாலும் இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், இப்பணியிடம் **1.10.2016** முதல் **30.9.2018** வரை நீட்டித்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் **1.10.2018** முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பண்டக காப்பாளர் ( உதவியாளர் நிலை ) பணியிடத்தினை **1.10.2016** முதல் **30.9.2018** வரை நீட்டித்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் **1.10.2018** முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.1377/2016/சி1)**

**10)** இந்நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் வடிகட்டும் படுகை இயக்குபவர் பணியிடம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் **19.01.1976** ன்படி தோற்றுவிக்கப்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.55526/2011/எப்3 நாள் **19.12.2012** ல் **01.10.2012** முதல் **30.09.2013** வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 35 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018** முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : வடிகட்டும் படுகை இயக்குபவர் பணியிடத்தினை **01.10.2013** முதல் **30.09.2018** வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், **01.10.2018**முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண். 1378/2016/சி1)**

11) இந்நகராட்சிக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் உள்ள சத்துணவு மையங்களுக்கு குடிநீர் வழங்க இரண்டு மிட்சிபிட்சி, பவர் டில்லர், ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவித்துக்கொள்ள அரசாணை எண் 518, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 15.12.1984 ன்படி அனுமதிக்கப்பட்டது. கடந்த 30 ஆண்டுகளாக மேற்படி இரண்டு பணியிடங்களுக்கும், தொடர்ந்து பணி நீடிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2011/எப்3 நாள் 19.12.2012 ல் 01.10.2012 முதல் 30.09.2013 வரை நீடித்து வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு பவர் டில்லர்கள் தற்போது பயன்பாட்டில் இல்லாததால், ஒரு ஓட்டுநரை குடிநீர் லாரியை ஓட்டுவதற்கும், ஒரு ஓட்டுநரை நகர்மன்றத்தலைவரின் ஈப்பினை ஓட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 30 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : இரண்டு மிட்சிபிட்சி பவர் டில்லர் ஓட்டுநர் பணியிடங்களை 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (க.எண்.1379/2016/சி1)

12) கோபிசெட்டிபாளையம் நகராட்சி 30.04.2018 அன்று இரவு பெய்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக விழுந்து விட்ட சுப்பு நகரில் 2 வேப்பமரங்கள் மற்றும் கவின் கார்டன் பகுதியில் 1 வேப்பமரம் ஆகியவைகளை வெட்டி அப்புறப்படுத்தி எடுத்துக்கொள்ளும் பணிக்கு 03.05.2018 ல் பொது ஏலம் கோரப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.1550/– ( ரூபாய் ஆயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) திரு. D. தினேஷ், 30 பிள்ளையார் கோவில் வீதி, கோபிசெட்டிபாளையம் என்பவர் கோரியுள்ளார். மேற்படி ஏலத்தினை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அ) உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ. 1550/– (ரூபாய் ஆயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) கோரிய திரு. D. தினேஷ், 30 பிள்ளையார் கோவில் வீதி, கோபிசெட்டிபாளையம் என்பவரின் ஏலத்தினை அங்கீகரிக்கலாம்.

ஆ) காற்றில் விழுந்து போன மரங்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால், அவசர அவசியம் கருதி பொது ஏலம் விடப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

13) கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஒரு ஆண்டு சாதனை எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின்விபரம்தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்குவிளம்பரக்கட்டணம்ரூ.9639/– ஐ (ரூபாய் ஒன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) ` The Daily Thanthi ` என்ற பெயரில் மேற்படி நாளிதழிற்கு செலுத்தவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

14) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 18.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் ரா வாட்டர், 30 எச்.பி நீர் முழ்கி மோட்டார், ஸ்டார்ட்டர் பழுது பார்க்கும் பணி | 1,08,000 | M/s. ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 1.55 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. குமரன் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 1.87 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் கிளாரிபையர் தொட்டி சுத்தம் செய்ய பைப் லைன் அமைத்தல் பணி | 70,000 | M/s. ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 2.36 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. குமரன் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 3.86 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 5 எச்.பி வேக்கம் பம்பு பொருத்துதல் | 70,000 | M/s. ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 1.35 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. குமரன் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் | 2.77 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சீதாலட்சுமி மருத்துவமனை எதிரில் உயர் கோபுர மின் விளக்குகள் பழுது பார்க்கும் பணி | 80,000 | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 1.33 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஒர்க்ஸ் | 8.48 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினி வரி வசூல் மையத்தில் Inverter Batterys – 12volt 150AH பேட்டரிகள் 2 எண்ணிக்கை வாங்கி பொருத்துதல் | 45,000 | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 2.78 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஒர்க்ஸ் | 2.78 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
4. வ.எண்.4–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
5. வ.எண்.5–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

15) இந்நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 18.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் தானியங்கி குளோரின் பிளாண்ட் விநியோகம் செய்து நிறுவுதல் | 5,50,000 | M/s. I Tech Systems | 0.42 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. ஸ்ரீதரன் கெமிக்கல்ஸ் | 3.32 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.42 சதவீதம் குறைவாக குறிப்பிட்டுள்ள M/s. I Tech Systems அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**16)** இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு **24.05.2018** தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் கிழக்கு பகுதியில் புதிய சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை மற்றும் பராமரிப்பு பணி அமைத்தல் | 4,00,000 | P.கந்தசாமி ஒப்பந்ததாரர் | 0.43 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 5.71 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | வார்டு எண்.27–ல் சீதாலட்சுமிபுரம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1,20,000 | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 1.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | 3.99 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட கரட்டூர் உடல் புதைக்கும் இடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி, ராமர் எக்ஸ்டன்சன் மின் மயானத்தில் தடுப்பு சுவர் மற்றும் மின் வசதி ஏற்படுத்திதரும் பணி | 2,50,000 | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | 0.60 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | 3.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள P.கந்தசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**17)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி.நாகம்மாள் , க/பெ.(லேட்) ரங்கன் **17.11.2017** ம் தேதியில் பணியிடை காலமாகிவிட்டார். எனவே அன்னாருக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநலநிதித் தொகை ரூ.**5220/–** ஐ சிறப்பு சேமநலநிதிக்கணக்கிலிருந்தும், வட்டித்தொகை ரூ.**6445/–** ஐ பொது நிதிக்கணக்கிலிருந்தும் அன்னாரின் வாரிசுதாரர் திருமதி.M.தனலட்சுமி, க/பெ. முனுசாமி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** அனுமதி அளிக்கலாம். ( க.எண்.1097/2018/பி4)

**18)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி.பண்ணாரி , க/பெ. கிட்டான் **10.10.2017** ம் தேதியில் பணியிடை காலமாகிவிட்டார். எனவே அன்னாருக்கு சேரவேண்டிய சிறப்பு சேமநலநிதித் தொகை ரூ.**2960/–** ஐ சிறப்பு சேமநலநிதிக்கணக்கிலிருந்தும், வட்டித்தொகை ரூ.**29424/–** ஐ பொது நிதிக்கணக்கிலிருந்தும் அன்னாரின் வாரிசுதாரர் திருமதி.K.லட்சுமி, க/பெ. ராஜன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு :** அனுமதி அளிக்கலாம். ( க.எண்.1150/2018/பி4)

**19)** இந்நகராட்சியில் பணிபுரிந்து வந்த கீழ்கண்ட பணியாளர்கள் **31.05.2018** ல் ஓய்வு பெற உள்ளார்கள். அன்னாருக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதித்தொகையினை சிறப்பு சேமநலநிதிக் கணக்கிலிருந்தும், அதற்குரிய வட்டித்தொகை மற்றும் பங்குத்தொகையை பொது நிதிக்கணக்கிலிருந்தும் கீழ்கண்ட விபரப்படி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| பணியாளர் பெயர் | சிறப்பு சேமநலநிதி தொகை | வட்டித்தொகை | பங்குத்தொகை |
|---|---|---|---|
| 1) திரு.கே. செல்வராஜ் | ரூ. 2,960/– | ரூ.21,217/– | ரூ.10,000/– |
| 2) திரு.A.நாகராஜன் | ரூ.2,960/– | ரூ.27,028/– | ரூ.10,000/– |

**அலுவலகக்குறிப்பு :** அனுமதி அளிக்கலாம். (க.எண்.1335/2018/பி4)

20) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினசரி வீடுகள் தோறும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. அதில் மக்காத குப்பையான பிளாஸ்டிக்கையும் தனியாக பிரிக்கப்பட்டு அதை அந்தந்த பகுதியில் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. மறு சுழற்சிக்கு ஏற்ற பிளாஸ்டிக் கழிவுகளை 30 வார்டுகளில் தினசரி சுமார் 550 kg வரை பிரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை பேல் போடும் இயந்திரம் மூலமாக பேல் போட இருப்பதால் 06 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு தலா ஒரு இயந்திரம் வாங்கி வழங்கப்பட வேண்டும். எனவே, மேற்காணும் இயந்திரம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.35,000 த்திற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கவும் மேற்படி செலவினத்தை 2018 – 19 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்க்க்வும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்டுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1553/2018/எச்1)

21) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான டிப்பர் லாரி வாகனம் எண் TN 36 J 2724 க்கு தகுதிச்சான்று காலம் 09.05.2018 உடன் முடிவடைகிறது. வாகனங்கள் பராமரிப்பிற்கு ஆகும் செலவினங்களுக்கு நகர் மன்ற தீர்மான எண் 281 நாள் 26.03.2018 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு 10.05.2018 ல் பணிமனைதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிமனைதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்<br>1,சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம், மேட்டூர். | ரூ.88,390/- |
| 2 | ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ்<br>20 எ,புத்தர் தெரு, நாய்க்கன் காடு, கோபி. | ரூ.86,298/- |

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.86,298/- அளித்துள்ள வரிசை எண் 2 ல் உள்ள ஸ்ரீ கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1209/2018/எச்1)

22) கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை வார்டு வாரியாக தனித்தனியாக எடை போட வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேற்கண்ட அறிவுரையின்படி ஒவ்வொரு வார்டு வாரியாக குப்பைகளை தரம் பிரித்து Wet Waste மற்றும் Dry Waste யினை தனித்தனியாக டம்பர் பின் மூலமாக எடை போட ( 30 வார்டுகளில்) 2018–19 நிதியாண்டில் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–( ரூபாய் ஒரு லட்சத்திற்கு) க்கும், எடை போடும் நிறுவனத்திற்கு எடை போடும் போது நேரடியாக பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (க.எண்.1554/2018/எச்1)

23) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவுக்கு சொந்தமான TN 36 AA 4492 மற்றும் TN 36 J 6855 ஆகிய இரண்டு வாகனங்களின் பேட்டரி பழுதடைந்து விட்டதால் புதிதாக பேட்டரி பொருத்துவதற்கு ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.281 நாள்.26.03.2018 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 03.04.2018 இல் விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளியை மன்றத்தின் பபர்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகன எண் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | ஸ்ரீ ராகவேந்திரா ஆட்டோ மொபைல்ஸ், கோபி விலைப்புள்ளித்தொகை | ஸ்ரீ பேட்டரீஸ், கோபி விலைப்புள்ளித் தொகை | ஸ்ரீ ராகவேந்திரா எலக்ட்ரோ எக்யூப்மென்ட்ஸ், கோபி விலைப்புள்ளித்தொகை |
| 1. | TN 36 AA 4492 | ரூ.6000/– | ரூ.6200/– | ரூ.6200/– |
| 2. | TN 36 J 6855 | ரூ.7500/– | ரூ.7800/– | ரூ.7700/– |

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஸ்ரீ ராகவேந்திரா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 870/2018/எச்1)**

**24)** இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு காச நோய் ஒழிக்கும் வகையில் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குடியிருப்புகளை ஆய்வு செய்தல் மற்றும் நிலவேம்பு கசாயம் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் **281** நாள் **26.03.2018** ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, இதனை தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் **52** DBC பணியாளர்களை வழங்குவதற்கான தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி **09.05.2018** அன்று கோரப்பட்டு வருகை புரிந்திருந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

இதில் நெப்டியூன் ஆட்டோமேசன் மற்றும் கிரீன் ரெய்டு ஆகிய இரண்டு தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் **09.05.2018** அன்று திறக்கப்பட்டது. இதில் கிரீன் ரெய்டு நிறுவனத்தாரின் தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளியில் முன் அனுபவ சான்று இணைக்கப்படவில்லை. எனவே, இந்நிறுவனத்தாரின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கலாம் என்றும் தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் டெங்கு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது என்றும் எனவே நெப்டியூன் ஆட்டோமேசன் நிறுவனத்தாரின் தகுதிவாய்ந்த தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளியை ஏற்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளியை (Price Bid) திறக்கலாம் என கமிட்டி பரிந்துரை செய்ததை அடுத்து 16.05.2018 அன்று நெப்டியூன் ஆட்டோமேசன் நிறுவனத்தாரின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை குறிப்பிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | நெப்டியூன் ஆட்டோமேசன், ஈரோடு | **8580 403 = 34,57,740** |

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்டவாறு வரப்பெற்ற குறைவான விலைவிகிதம் (நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 403/-) ரூ.34,57,740/- ஆனது மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக உள்ளது. எனவே நெப்டியூன் ஆட்டோமேசன் நிறுவனத்தாரின் குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.1159/2018/எச்1)**

**25)** **22.05.2018** ம் நாள் அன்று நடத்தப்பட்ட NIPHA வைரஸ் தொடர்பான மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படி, இந் நகராட்சியிலுள்ள சிவசண்முகம் வீதி, செங்கோட்டையன் காலனி, சின்னசாமி வீதி மற்றும் கீரி பள்ளம் ஓடை பகுதிகளில் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. மேற்காணும் இடங்களில் பன்றிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே தற்சமயம் NIPHA வைரஸ் கிருமிகள், வவ்வால் தின்று போடப்பட்ட பழங்கள் சிறுநீர் மற்றும் எச்சம் ஆகியவற்றிலிருந்தும், (பன்றிகளுக்கும்) ஓடை பகுதியில் இருக்கும் பன்றிகளுக்கும் NIPHA வைரஸ் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. பன்றிகள் மனிதர்களுக்கு மிக அருகில் இருப்பதாலும், அதன் இறைச்சியை உண்பதாலும் மனிதர்களுக்கு பன்றிகள் மூலமாக NIPHA வைரஸ் பரவும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளிலுள்ள பன்றிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக பிடிப்பதற்கு ஆகும் உத்தேச செலவு **ரூ.20,000/-** (இருபது ஆயிரம்) க்கு மன்ற அனுமதி கோரி மன்றப்பொருள் வைக்கவும் இதனை **2018-19** ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் **(க.எண்.1617/2018/எச்1)**

26) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை கரட்டூர் பகுதியில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான 1.89 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. ஏப்ரல் முதல் மே கடைசி வரையிலான கோடை காலத்தில் வெப்பம் அதிகரித்து மீத்தேன் வாயு அதிகளவில் வெளியேறி வருவதாலும் இதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டு விடுகிறது. மேற்படி உரக்கிடங்கு மதில் சுவரைச்சுற்றி 3 இன்ச் GI பைப் போடப்பட்டு தீ விபத்து ஏற்படும்போது Fire Service ஓஸ் மூலமாக தண்ணீர் கொண்டு சென்று அனைக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 63 mm RRL hose with GI Coupling இரண்டு வருடங்களுக்கு முன் வாங்கி தரப்பட்டு இதுநாள் வரை பயன்படுத்தப்பட்டு தற்சமயம் Fire Service ஓஸ் பழுதடைந்துள்ளதால் அதிகளவு தண்ணீர் ஓஸின் ஓட்டை வழியாக வீணாகி வருகிறது. மேலும், உரக்கிடங்கு பகுதியில் தீ ஏற்படும் போது கட்டுப்படுத்த முடியாமல் அதிகளவு சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட உரக்கிடங்கிற்கு தேவையான 63 mm RRL hose with GI Coupling எண்ணிக்கை 5 பொதுசுகாதாராப்பிரிவுக்கு வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,60,000/- த்திற்கும் மேற்படி செலவினத்தினை 2018 – 19 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சேர்க்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1615/2018/எச்1)

27) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்ட தீர்மானத்தில் வார்டு பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதியிலேயே (கொமராபாளையம் நகராட்சி மாதிரி) பெரிய அளவு 100 கிலோ அளவுள்ள பேரல்களில் (Barrel Composting) மக்கும் குப்பைகளை அடைத்து வைத்து உரம் தயார் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் வார்டு எண்.24 ல் சேகரம் ஆகும் குப்பைகளை அந்த வார்டு பகுதியில் 10 எண்ணிக்கை கொண்ட பேரல்கள் மூலமாக சோதனை அடிப்படையில் உரம் தயார் செய்ய பொது சுகாதாரப்பிரிவுக்கு 10 எண்ணிக்கை பேரல் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,000 க்கு அனுமதி வேண்டியும் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தினை 2018 – 19 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சேர்க்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் (க.எண்.1616/2018/எச்1)

28) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை 100 கிலோ அளவுள்ள பேரல்களில் அடைத்து வைத்து உரம் தயார் செய்வதற்கு தேவையான பேரல்கள் விநியோகம் செய்வதற்கான விலைப்புள்ளிகள் 17.5.2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற விபரத்தை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பேரல் ஒன்றிற்கான விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | பி.எம். தட்சிணாமூர்த்தி நகராட்சி ஒப்பந்ததாரர், பவானி | ரூ. 2464/- |
| 2 | கே.எஸ். மாரியப்பன் ஒப்பந்ததாரர், பவானி | ரூ. 2324/- |
| 3 | எஸ்.ஏ. சக்ரபாணி & சன், பவானி | ரூ. 2240/- |

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3 ல் குறைவான விலைவிகிதம் ரூ.2240/- அளித்துள்ள எஸ். ஏ. சக்ரபாணி & சன் பவானி அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (க.எண்.1616/2018/எச்1)

29) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஆறு துப்புரவு பணிமேற்பார்வையாளர் பணியிடம் உள்ளது. அதில் திரு.S. மோகனசுந்தரம், துப்புரவு பணி மேற்பார்வையாளர் **28.02.2016** அன்று பணி ஒய்வு பெற்றதிலிருந்து அப்பணியிடம் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது. தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டும் பணிகளும், திடக்கழிவு மேலாண்மை விதி **2016–** ன்படி 100% வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வாங்கி மக்கும் குப்பைகளை உரமாக்குதல், மக்காத குப்பைகளை மறு சுழற்சிக்கு உகந்தவைகள் என தரம் பிரித்து கையாள வேண்டி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க வீடு வீடாக பணியாளர்கள் கொசுப்புழு ஒழிப்பு, மருந்து தெளித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளை உடனிருந்து கண்காணிக்கவேண்டியுள்ளது. மேலும் இப்பணிகளை செய்ய காலியாக உள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தை நிரப்ப வேண்டியது அவசியமாக உள்ளது.

மேலும் மேற்படி அத்தியாவசிய பணிகள் எந்தவிதமான தங்கு தடையின்றி செய்ய இந்நகராட்சியில் **01.03.2016** முதல் காலியாக உள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் பூர்த்தி செய்வது அவசியமாகிறது. இப்பணியிடத்திற்கு தகுதியான துப்புரவு பணியாளர்கள் பதவி உயர்வு கோரி விண்ணப்பித்துள்ளனர். மேற்படி பணியிடம் காலியாகி ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் மேற்படி துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தை புதுப்பித்து பூர்த்தி செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு :** எந்தவிதமான தங்குதடையின்றி பொது சுகாதாரப்பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் **01.03.2016** முதல் காலியாக உள்ள துப்புரவுபணி மேற்பார்வையாளர் பணியிடத்தை புதுப்பித்து பூர்த்தி செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

30) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகர நடுநிலைப்பள்ளியில் புதிதாக பெறப்பட்ட 3 phase மின் இணைப்பில் MCB பொருத்தப்படாததால் கணனி இயக்கப்படும் போது அடிக்கடி Line trip ஆகிறது. எனவே MCB பொருத்தப்பட்டு ஒவ்வொரு பள்ளிக்கட்டிடத்திற்கும் தனித்தனியாக Wiring செய்யப்பட வேண்டும். மேற்படி பணிக்கு உத்தேச செலவினம் ரூ.**20,000/–** ஆகும். ( ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாணவர்களின் கல்வி அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக M/s. Exploslue Enterprises அவர்களின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

31) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கு உத்தேச செலவினம் ரூ.**1.00** இலட்சம் ஆகும். ( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

32) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளி, மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் முருகன்புதூர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளிலும் Sanitary Napkin burning Incinerator அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.**1.60** இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும், செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோபிசெட்டிபாளையம்
நாள். **30 .05.2018.**

தனி அலுவலர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி